செ.வெ.எண்:911 நாள்: 01.12.2009

(1)

<u>செய்திக் குறிப்பு</u>

1-12-2009

தமிழ்நாட்டிற்கும், அண்டை மாநிலங்களுக்குமிடையே உள்ள நதிநீர் பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள், நேர்வுகள் ஆகிய பணிகளை செயல்படுத்த மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

இவ்வாணைக்கிணங்க, இன்றைய தினம் (1.12.2009) அன்று மாண்புமிகு உயர்கல்வித் துறை, அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர், திரு. சு. இராமசுந்தரம், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை சிறப்புச் செயலாளர், திரு.அ. சந்திரசேகரன், காவிரி தொழில்நுட்பத் தலைவர் திரு. ஆ. மோகனகிருஷ்ணன், உபதலைவர் திரு.ஆர்.சுப்பிரமணியன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.ஜெயராமன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர், திரு. பி. இராமமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர், திரு.த.அன்பழகன் மற்றும் இதர அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தில் 19.1.2010 அன்று அரசமைப்புச் சட்ட அமர்வு முன் விசாரணை தொடங்க உள்ள நிலையில், இவ்வரசு அணுக வேண்டிய முறைகள் குறித்தும், அணைப் பகுதியில் தமிழகப் பொறியாளர்கள் கேரள அரசின் தடைகளினால், அணையின் பராமரிப்புப் பணிகளைக்கூட செய்ய முடியாமல் இருக்கக் கூடிய நிலையினையும் மற்றும் தமிழக பொறியாளர்கள் அனுபவித்து வருகின்ற இடர்ப்பாடுகள் குறித்தும், அரசு உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

1/2

மேலும், காவிரி நதிநீர் தாவா, பாலாறு பிரச்சனை போன்ற அண்டை மாநிலங்களுக்கிடையேயான இதர பிரச்சனைகளில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தின் முடிவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையினைப் பெற்று, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என்று கருதப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9